# 18.04.2022ம் திகதிய 49வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : மு.ப 9.30 மணி
காலம் : 18.04.2022ம் திகதி திங்கட்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

- திரு.பத்மநாதன் மயூரன் - கௌரவ தவிசாளர்
- திரு.இராஜமனோகரன் ஜெயகரன் - கௌரவ உபதவிசாளர்
- திருமதி.கௌசலா சிவா - கௌரவ உறுப்பினர்
- திரு.கணேசு முருகையா - கௌரவ உறுப்பினர்
- திரு.இராசையா இராசலிங்கம் - கௌரவ உறுப்பினர்
- திரு.செல்வநாயகம் சிவலோஷன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தெய்வேந்திரம் கிரிதரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.வாசுகி சுதாகர் - கௌரவ உறுப்பினர்
- திருமதி.ரவிதாஸ்.கோமதி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை - கௌரவ உறுப்பினர்
- திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா - கௌரவ உறுப்பினர்
- திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கந்தையா குகானந்தன் - கௌரவ உறுப்பினர்
- திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.குமாரசாமி மதுசுதன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.குலேந்திரன் பிரிந்தா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.விஜயகுமார் சிந்துஜா - கௌரவ உறுப்பினர்
- திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் - செயலாளர்

மேற்படி கூட்டமானது மு.ப 9.35 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினையும் சித்திரை புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 48 வது மாதாந்த கூட்ட அறிக்கை (மார்ச்) மற்றும் 27வது விசேடகூட்ட அறிக்கை ஆகியன அங்கீகரித்தல். குறித்த அறிக்கைகளில் திருத்தமிருந்தால் அதனைத் தெரிவிக்குமாறும் சரியாயின் அவற்றினை அங்கீகரிக்குமாறும் கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையினரிடம் கோரியதைத் தொடர்ந்து குறித்த அறிக்கைகள் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 18.04.2022/01**

11.03.2022ம் திகதிய 48வது சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/02**

25.02.2022ம் திகதிய 27வது விசேட கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். குறித்த அறிவிப்பில் நேற்றைய தினம் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான சபையின் பொதுக்கூட்டமானது இடம்பெற்று புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதனை சபைக்கு தெரிவிப்பதுடன் கூட்ட அறிக்கை நிர்வாக அங்கத்தவர்கள்

தொடர்பான விபரங்களை அடுத்த சபையில் அறியத்தருவதாகத் தெரிவித்தார். தவிசாளர் அறிவிப்பில் அடுத்து 2022ஆம் ஆண்டுக்கான 1ஆம் கட்ட வேலைகளுக்கான கேள்வி தற்போது கோரப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருவதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் 03வது விடயம் உபகுழுக்களின் சிபார்சிற்கான சபை அனுமதி பெறல். அவற்றில் 01.04.2022ஆம் திகதிய நிதிக்குழு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவை ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 18.04.2022/03**

நிதிக்குழு சிபார்சுக்கமைவாக Renovation of ward base Roads (ward -10) வேலைக்கான 1வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 3,062,152.37 வினை Jayas works ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/04**

நிதிக்குழு சிபார்சுக்கமைவாக 11.02.2022/27ஆம் தீர்மானத்தில் குறிப்பிட்ட கீழ்வரும் வேலைகளை கடைகொள்ளல் முறையில் நிறைவேற்றமுடியாமையால் அவற்றை கேள்வி கோரல் முறையில் நிறைவேற்றவதென கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01. வட்டாரம் 08, 09, 10 இல் கட்டட திருத்த வேலைகள் - கட்டம் 1
02. வட்டாரம் 08, 09, 10 இல் கட்டட திருத்த வேலைகள் - கட்டம் 11
03. திருநெல்வேலிச்சந்தைக் கடை கூரை அமைத்தல்

**தீர்மானம் 18.04.2022/05**

நிதிக்குழு சிபார்சுக்கமைவாக Renovation of ward base Roads (ward -12) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 882,112.66 வினை Nation Builders ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/06**

நிதிக்குழு சிபார்சுக்கமைவாக யாழ்மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் 1000 பிச.01 புத்தகங்கள் அச்சிட்டமைக்கான கொடுப்பனவு ரூபா 655000.00 வை குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி மற்றும் கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா ஆகியோர் மு.ப. 10.00 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தனர்.

**தீர்மானம் 18.04.2022/07**

Renovation of ward base Roads ( ward – 03) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 916,89.37 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/08**

Renovation of ward base Roads ( ward – 06) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,551,268.00 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய

கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/09**

Renovation of ward base Roads ( ward – 10) வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 206106.89 ஐ jeyas works ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/10**

Renovation of Concrete roads வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,120,035.00 ஐ Bran Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/11**

Improvement to Koddikadu, Kadaiyalady இந்து மயான வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,271,204.90 ஐ Tree Civil Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/12**

Improvement to Karaikal, Thirunelvely, Sithuparthy Mfpa இந்து மயான வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,023,255.15 ஐ Tree Civil Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/13**

2021ஆம் ஆண்டு கணிப்பீட்டுச்சபையால் ஏலவிற்பனைக்கென பரிந்துரைக்கப்பட்ட பொருட்களுக்கான ஏல விற்பனை அறிவித்தலை 21.04.2022ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரம் செய்து 27.04.2022ஆம் திகதி ஏலவிற்பனை செய்வதற்கும் அதனைத்தொடர்ந்து அழிப்புசபை நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சபை அனுமதி வழங்குவதாகவும் அத்துடன் குறித்த 2ஆம் கணிப்பீட்டுச்சபைக்கு கீழ்வரும் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதற்கும் சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திருமதி.N. தயானி – தலைவர் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
- திரு. சு.விஜயகுமாரன் - குழு உறுப்பினர், கௌரவ உறுப்பினர் நல்லூர் பிரதேசசபை
- திரு.வ.மயில்வாகனம் - குழு உறுப்பினர் , வருமான மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேசசபை

**தீர்மானம் 18.04.2022/14**

12 வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மேசைகொள்வனவு செய்வதற்கும் E.Library திட்டத்தில் போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் 5S திட்டத்தில் தளவரைபடத்துடன் கூடிய அறிவித்தல் பலகை அகியன கொள்வனவு செய்வதற்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 04வது விடயம் ஆடியபாதம் வீதிக்கு அருகிலுள்ள வாய்க்கால் தொடர்பானது. குறித்த வாய்க்கால் புனரமைப்பு தொடர்பாக வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் கொக்குவில் ஆடியபாதம் வீதியிலிருந்து செம்மணி வீதி வரையான குறித்த வாய்க்காலை எம்மை பொறுப்பேற்குமாறு கோரி கடிதம்

அனுப்பியுள்ளதாக தெரிவித்து குறித்த கடிதம் சபையில் கௌரவ தவிசாளர் அவர்களினால் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் திருநெல்வேலிச்சந்தியிலிருந்து செம்மணி வரையான வீதிக்கருகிலுள்ள வாய்காலில் சில சில இடங்களில் மூடி இல்லை எனத் தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் எம்மால் ஏற்கனவே அவர்களுக்கு சகல இடங்களிலுள்ள வாய்க்கால்களுக்கும் மூடிகள் அமைக்குமாறு வழங்கப்பட்ட கோரிக்கை அமைய மூடி அமைத்து நிவர்த்தி செய்து தருவதாக அவர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். தற்போது குறித்த வாய்க்காலை எமக்கு ஒப்படைக்க இருந்தாலும் அவற்றுக்கு வர்ணம் பூசி அழகுபடுத்தி வருகின்றார்கள் எனத் தெரிவித்ததை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/15**

வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் கொக்குவில் சந்தியிலிருந்து செம்மணி வரையான ஆடியபாதம் வீதியின் அருகிலுள்ள வாய்க்காலினை எமக்கு வழங்குவதாக கடிதமூலம் தெரிவித்துள்ளமையால் குறித்த வாய்க்கால் பெற்றுக்கொள்வது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு சபையால் அதனை பொறுப்பேற்றுக்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 05வது விடயம் மார்ச் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை சபை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/16**

மார்ச் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| **அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - பங்குனி - 2022** | | | | | |
|---|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | | |
| **இல** | **விண்ணப்ப இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனுமதித்த திகதி** |
| 1 | N/83/2021 | சி.செல்வநந்தினி | அம்மன் வீதி | 2 மாடி வீடு | 11.03.2022 |
| 2 | N/13/2022 | வ.சியாமளா | ஆடியபாதம் வீதி | மதில் | 11.03.2022 |
| 3 | N/105/2019 | கொ.நிதிலா | 1ம் குறுக்கு | 2 மாடி வீடு | 18.03.2022 |
| 4 | N/153/2021 | கெ.புஸ்பராணி | நாவலடி அம்மன் 1ம் குறுக்கு ஒழுங்கை | வீடு | 18.03.2022 |
| 5 | N/14/2022 | க.தமிழரசி | அரசடி ஒழுங்கை | வீடு | 25.03.2022 |
| 6 | N/166/2018 | றொ.தனுஷா | கலாசாலை வடக்கு 1ம் ஒழுங்கை | திருத்திய கடை | 25.03.2022 |

| இல | விண்ணப்ப இல | பெயர் | முகவரி | கட்டட விபரம் | அனுமதித்த திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | K/208/2021 | இ.சுமதினி | கலட்டி வீதி | வீடு | 04.03.2022 |
| 2 | K/16/2022 | அ.இந்திராணி | கோகுல வீதி | 2 மாடி வீடு | 04.03.2022 |
| 3 | K/235/2021 | ர.நேசமலர் | பலாலி வீதி | மதில் | 04.03.2022 |
| 4 | K/238/2021 | தி.யாழினி | கருவப்புலம் லேன் | வீடு | 04.03.2022 |
| 5 | K/21/2022 | மு.அனுஷாதேவி | கலட்டி முந்தல் ஒழுங்கை | 2 மாடி வீடு | 04.03.2022 |
| 6 | K/254/2020 | பா.மஞ்சுளா | முருகமூர்த்தி லேன் | திருத்திய 3 மாடி வீடு COC | 04.03.2022 |
| 7 | K/19/2022 | யா.லாவண்யா | கேணியடி ஒழுங்கை | மதில் | 04.03.2022 |
| 8 | K/207/2021 | த.ரகுணா | கலாசாலை வீதி | 2 மாடி வீடு | 11.03.2022 |
| 9 | K/18/2022 | ர.கமலநாயகி | பிள்ளையார் கோயில் வீதி | வீடு | 11.03.2022 |
| 10 | K/254/2021 | சி.சிவபாக்கியம் | நீதிராசா வீதி | வீடு | 18.03.2022 |
| 11 | K/54/2021 | ச.தேவமலர் | கருவப்புலம் வீதி | வீடு | 18.03.2022 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | K/232/2021 | இ.மனோகரிதேவி | ஞானவைரவர் லேன் | 2 மாடி வீடு | 18.03.2022 |
| 13 | K/11/2022 | சி.காவ்யா | கருவப்புலம் ஒழுங்கை | 2 மாடி வீடு | 18.03.2022 |
| 14 | K/245/2016 | தெ.நாகேஸ்வரி | மணியர்பதி ஒழுங்கை | தி/வீடு/2மாடி COC | 18.03.2022 |
| 15 | K/05/2022 | தே.சுகந்தன் | பலாலி வீதி | 2 மாடி வீடு | 25.03.2022 |
| 16 | K/15/2022 | சு.சுதானந்தன் | குளங்கரை ஒழுங்கை | வீடு | 25.03.2022 |

நிகழ்ச்சி நிரலில் 06வது விடயம் மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவு அனுமதி கோரல். குறித்த கொடுப்பனவுக்குரிய அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதி கோரியதை தொடர்ந்து சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/17**

மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| V.No | Date | Cash Book 162-1001-00000-920 | Details - March 2022 | Cash | XE |
|---|---|---|---|---|---|
| G/01 | 4 | கஸ்ரல் சேவிஸ் | திரு சந்தை சுத்திகரிப்பு | 242,540.00 | |
| G/02 | | கோல்டன் ஈகிள் | சாரதி சேவை | 81,900.00 | |
| G/03 | | சக்தி இஞ்சினியரிங் | மீள்தாரிடல் வட்டாரம் 01 | 1,714,586.81 | 90,030.89 |
| G/04 | | தாரணி சிவில் இஞ்சினியரிங் | மீள்தாரிடல் வட்டாரம் 4,5,6,7 | 70,433.73 | 3,575.47 |
| G/05 | | பொற்பதி சசநி | வெளிவாரித் தொழிலாளர் கொடுப்பனவு | 519,048.00 | |
| G/06 | | நேசன் கென்ஸ்ரக்சன் | வட்டாரம் 5 வீதி வேலை | 1,748,136.09 | 92,007.17 |
| | | | | **4,376,644.63** | **185,613.53** |
| G/07 | 8 | மொபிடல் | வாகன ஜீபிஎஸ் சிம் | 10,000.00 | |
| G/08 | | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | வறுமை ஒழிப்பின் கீழான பயிற்கிகளுக்கான முற்பணம் | 400,000.00 | |
| | | | | **410,000.00** | **-** |
| | | | | **4,376,644.63** | **185,613.53** |
| | | | | **4,786,644.63** | **185,613.53** |
| G/09 | 10 | மாபிள் சிவில் இஞ்சினியரிங் | கொக்குவில் சந்தை கடைத் தொகுதி | 1,114,244.11 | 123,804.90 |
| | | | | **1,114,244.11** | **123,804.90** |
| | | | | **4,786,644.63** | **185,613.53** |
| | | | | **5,900,888.74** | **309,418.43** |
| G/10 | 14 | ப நோ கூ ச | எரிபொருள் | 245,656.30 | |
| G/11 | | ப நோ கூ ச | சுத்திகரிப்பு பொருட்கள் | 4,800.00 | |
| G/12 | | ஸ்ரார் அட்வெடிசிங் | கேள்வி வைப்பு | 25,000.00 | |
| G/13 | | ஸ்ரார் அட்வெடிசிங் | பனர் | 2,040.00 | |
| G/14 | | செயலாளர் பி ச நல்லூர் | மகளிர் தின நிகழ்விற்கான முற்பணம் | 50,000.00 | |
| G/15 | | வளர்மதி கடைச்சல் வேலை | உழவியந்திர திருத்தம் | 26,910.00 | |
| | | | | **354,406.30** | **-** |
| | | | | **5,900,888.74** | **309,418.43** |
| | | | | **6,255,295.04** | **309,418.43** |
| G/16 | 16 | ஜெயாஸ் வேக்ஸ் | | 1,470,994.58 | 77,420.76 |
| | | | | **1,470,994.58** | **77,420.76** |
| | | | | **6,255,295.04** | **309,418.43** |
| | | | | **7,726,289.62** | **386,839.19** |
| G/17 | 18 | எம் பகீரதன் | கே படிவம் | 2,511.00 | |
| G/18 | | எம் பகீரதன் | ஆதன வரி தரகு | 10,650.80 | |
| G/19 | | ஏ செந்தூர்செல்வன் | ஆதன வரி தரகு | 71,425.85 | |
| G/20 | | மாபிள் சிவில் கென்ஸ்ரக்சன் | வரி | 89,139.52 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/21 | | மொபிடல் | வாகன ஜீபிஎஸ் சிம் | 2,000.00 | |
| G/22 | | றீ சிவில் இஞ்சினியரிங் | கட்டயாலடி கொட்டைக்காடு மயான அபிவிருத்தி | 1,164,396.57 | 83,248.03 |
| G/23 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 167,091.10 | |
| | | | | **1,507,214.84** | **83,248.03** |
| | | | | **7,726,289.62** | **386,839.19** |
| | | | | **9,233,504.46** | **470,087.22** |
| G/24 | 21 | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசேடு | 10,000.00 | |
| G/25 | | நேசன் பில்டேஸ் | வட்டாரம 9 வீதி வேலை | 609,558.59 | 32,082.03 |
| G/26 | | மாபிள் சிவில் இஞ்சினியரிங் | வற் | 190,034.54 | |
| G/27 | | மாபிள் சிவில் இஞ்சினியரிங் | கொக்குவில் சந்தை கடைத் தொகுதி | 2,375,431.59 | 263,936.85 |
| G/28 | | கிறியேட்டிவ் கென்ஸ்ரக்சன் | மயான அபிவிருத்தி | 424,034.73 | 47,114.97 |
| | | | | **3,609,059.45** | **343,133.85** |
| | | | | **9,233,504.46** | **470,087.22** |
| | | | | **12,842,563.91** | **813,221.07** |
| G/29 | 22 | நோத்லிங் | போட்டோ கொப்பி இயந்திரம் | 124,500.00 | |
| G/30 | | ஸ்ரார் அட்வெடிசிங் | பனர் | 3,500.00 | |
| G/31 | | எஸ் லவதீசன் | கே படிவம் | 32,373.00 | |
| G/32 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | விதி விளக்குகளுக்கான பொருட்கள் | 13,400.00 | |
| G/33 | | ஜ7 கொம்பியூட்டஸ் | | 53,010.00 | |
| G/34 | | மெற்றோபொலிடன் | ரோனர் கொள்வனவு | 50,220.00 | |
| | | | | **277,003.00** | **-** |
| | | | | **12,842,563.91** | **813,221.07** |
| | | | | **13,119,566.91** | **813,221.07** |
| G/35 | 23 | செயலாளர் பிச நல்லூர் | திரு சந்தை புதிய இடம் வழங்கல் கட்டணம் | | 823,558.45 |
| G/36 | | ஏ ஜெலாஜினி மற்றும் ஏனையோர் | வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு | 13,000.00 | |
| G/37 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 3,000.00 | |
| G/38 | | வலம்புரி | விளம்பரம் | 2,700.00 | |
| G/39 | | வலம்புரி | விளம்பரம் | 4,218.00 | |
| G/40 | | சந்திரா செக்குறிட்டி பிளஸ் | சுத்திகரிப்பு சேவை | 168,782.50 | |
| G/41 | | நளின் இன்போமேசன் | இன்ரர் கொம் திருத்தம் | 4,500.00 | |
| G/42 | | நளின் இன்போமேசன் | கணனி கொம் திருத்தம் | 1,800.00 | |
| G/43 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,250.00 | |
| G/44 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசேடு | 8,240.00 | |
| G/45 | | மெற்றோபொலிடன் | ரோனர் கொள்வனவு | 159,786.00 | |
| G/46 | | ரதிகுமார் ரஞ்சன் | | 2,500.00 | |
| G/47 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 5,157.37 | |
| G/48 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 2,480.46 | |
| G/49 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 2,480.24 | |
| G/50 | | கோண்டாவில் கிழக்கு சசநி மற்றும் ஏனையவை | சசநி அபிவிருத்தி | 494,000.00 | |
| G/51 | | ப ஞானேஸ்வரன் | மீன் தொட்டி மோட்டர் கொள்வனவு | 1,750.00 | |
| G/52 | | எஸ் நடேசு | மயானக்கொடுப்பனவு | 2,000.00 | |
| G/53 | | எஸ் நடேசு | மயானக்கொடுப்பனவு | 2,000.00 | |
| G/54 | | கே சேனாதிராசா | மயானக்கொடுப்பனவு | 1,000.00 | |
| G/55 | | கே சேனாதிராசா | மயானக்கொடுப்பனவு | 1,800.00 | |
| G/56 | | எம் தீபன் | மேலதிக நேரம் | 974.97 | |
| G/57 | | வீ இளங்கோ | மேலதிக நேரம் | 1,183.12 | |
| G/58 | | நேசன் பில்டேஸ் | வட்டாரம் 8 வீதி வேலை | 682,628.65 | 35,927.82 |
| | | | | **1,568,231.31** | **859,486.27** |
| | | | | **13,119,566.91** | **813,221.07** |
| | | | | **14,687,798.22** | **1,672,707.34** |
| G/59 | 25 | ஈஎஸ்பி நாகரட்னம் | சைக்கிள் கொள்வனவு | 260,000.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/60 | | கிருஸ் கென்ஸ்ரக்சன் | மீள் தாரிடல் | 780,112.10 | 40,985.90 |
| G/61 | | ஏ.அப்புத்துரை | கேள்வி வைப்பு | 10,000.00 | |
| G/62 | | அனிஸ் கென்ஸ்ரக்சன் | மீள் தாரிடல் | 1,211,594.28 | 63,768.12 |
| G/63 | | கஸ்ரல் சேவிஸ் | சுத்திகரிபுபு சேவை | 206,340.00 | |
| G/64 | | கோள்டன் ஈகிள் | சாரதி சேவை | 91,455.00 | |
| G/65 | | கொக்குவில் மத்திய சசநி | கொக்குவில் இந்து கல்லூரி முன் வெள்ளவாய்க்கால் பாதுகாப்பு | 1,898,357.97 | 99,913.58 |
| | | | | 4,457,859.35 | 204,667.60 |
| | | | | 14,687,798.22 | 1,672,707.34 |
| | | | | 19,145,657.57 | 1,877,374.94 |
| G/66 | 28 | காளிகோவிலடி சசநி | பிடிபணம் | 16,794.67 | |
| G/67 | | காளிகோவிலடி சசநி | பிடிபணம் | 29,291.08 | |
| G/68 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் காசேடு | 10,000.00 | |
| G/69 | | கே பாலசுப்பிரமணியம் | வாகன சுத்திகரிப்பு | 21,150.00 | |
| G/70 | | வலம்புரி | விளம்பரம் | 3,750.00 | |
| G/71 | | அரோட் | மருந்து உறைகள் | 3,000.00 | |
| G/72 | | புகையிரதத்திணைக்களம் | புகையிரத ஆணைச்சீட்டு | 18,020.00 | |
| G/73 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 45,000.00 | |
| G/74 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 9,967.00 | |
| G/75 | | ரி கஜன் | விடுமுறை நாள் | 3,164.00 | |
| | | | | 160,136.75 | - |
| | | | | 19,145,657.57 | 1,877,374.94 |
| | | | | 19,305,794.32 | 1,877,374.94 |
| G/76 | 30 | ஆணையாளர் நாயகம் உள்நாட்டு இறைவரிகள் திணைக்களம் | வற்வரி 2016 2017 | 8,076,233.00 | |
| G/77 | | நளின் இன்போமேசன் | கைவிரல் அடையாள இயந்திர திருத்தம் | 1,800.00 | |
| G/78 | | ஒகஸ்ரா | மின்சாரப் பொருட்கள் | 78,883.00 | |
| G/79 | | கோபுரம் சவுண்ஸ் | ஒலிபெருக்கி திருத்தம் | 6,000.00 | |
| G/80 | | ஸ்பீட் ஐரி நெற் | இணையத்தள கட்டணம் | 5,000.00 | |
| G/81 | | ஆணையாளர் நாயகம் உள்நாட்டு இறைவரிகள் திணைக்களம் | முத்திரைக் கட்டணம் | 400.00 | |
| G/82 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 7,500.00 | |
| G/83 | | புதிய உதயன் | விளம்பரம் | 8,280.00 | |
| G/84 | | புதிய உதயன் | விளம்பரம் | 13,800.00 | |
| G/85 | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 2,041.53 | |
| G/86 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 72,320.85 | |
| G/87 | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 697.50 | |
| G/88 | | கே ஜெயபிரசாந் | வாகன வாடகை | 125,000.00 | |
| | | | | 8,397,955.88 | - |
| | | | | 19,305,794.32 | 1,877,374.94 |
| | | | | 27,703,750.20 | 1,877,374.94 |
| G/89 | 31 | குணபாலா வெல்டிங் வேக்ஸ் | வாகன திருத்தம் | 200,000.00 | |
| G/90 | | வி ரஜீவன் | மகளிர் தின நிகழ்விறகு மெடல் செய்தமை | 60,000.00 | |
| G/91 | | வளர்மதி கடைச்சல் வேலை | வாகன திருத்தம் | 154,000.00 | |
| G/92 | | கே சிறீமோகன் | இடர் கடன் | 212,500.00 | 37,500.00 |
| G/93 | | பணிப்பாளர் விளையாட்டுத் திணைக்களம் | இடர் கடன் வளர்மதி ரஞ்சிதமலர் | 423,000.00 | |
| G/94 | | பணிப்பாளர் முகாமைத்துவ பயிங்சி அலகு | இடர் கடன் ஸ்ரீ கலாதரன் | 216,605.74 | |
| G/95 | | பஷன் ஹவுஸ் | மகளிர் தினத்திற்கு சந்தன மாலை பொன்னாடை | 29,700.00 | |
| G/96 | | வலம்புரி | விளம்பரம் | 6,300.00 | |
| G/97 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 6,000.00 | |
| G/98 | | நளின் இன்போமேசன் | விளம்பரம் | 120,000.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G/99 | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,700.00 | |
| G/100 | | நேசன் பில்டேஸ் | வட்ாரம் 1 வீதி வேலை | 592,491.98 | 31,130.19 |
| G/101 | | நேசன் பில்டேஸ் | வட்டாரம் 1 வீதி வேலை வற் | 49,808.30 | |
| G/102 | | நேசன் பில்டேஸ் | வட்ாரம் 4 வீதி வேலை | 4,730.55 | 202.50 |
| G/103 | | நேசன் பில்டேஸ் | வட்டாரம் 4 வீதி வேலை வற் | 40,059.09 | |
| G/104 | | நேசன் பில்டேஸ் | வட்ாரம் 3 வீதி வேலை | 1,029,540.98 | 114,393.44 |
| G/105 | | செயலாளர் பிச நல்லூர் | மகளிர் தின முற்பண சீராக்கம் | | 30,000.00 |
| G/106 | | செயலாளர் பிச நல்லூர் | சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதி திரண்டநிதிக்கு மாற்றம் | | 294,378.46 |
| | | | | **3,147,436.64** | **507,604.59** |
| | | | | **27,703,750.20** | **1,877,374.94** |
| | | | | **30,851,186.84** | **2,384,979.53** |

| Cash Book 1095945 -March 2022 | | | | |
|---|---|---|---|---|
| **V.No** | **Date** | **Details** | **Cash** | **XE** |
| | 22 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 30,000,000.00 | |
| | | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 20,000,000.00 | |
| | | | **50,000,000.00** | **-** |
| | 23 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,212,821.54 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 242,088.42 | |
| | | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 28,525.00 | |
| | | செலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | பணிப்பாளர் மாகாண விளையாட்டுத் திணைககளம் | 17,145.77 | |
| | | பணிப்பாளர் முகாமைத்துவ பயிற்சி அலகு வட மாகாணம் | 1,250.00 | |
| | | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் | 5,770.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை வலிகாமம் தெற்கு. | 4,917.12 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 532,536.66 | 3,125.00 |
| | | | **6,048,792.51** | **3,125.00** |
| | | | **50,000,000.00** | **-** |
| | | | **56,048,792.51** | **3,125.00** |
| | 28 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 670,784.00 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 28,341.00 | |
| | | தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 2,350.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | | 375.00 |
| | | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 148,640.00 | |
| | | முகாமையாளர், கொமர்சியல் வங்கி திருநெல்வேலி | 97,750.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நசனல் வங்கி திருநெல்வேலி | 14,780.00 | |
| | | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |
| | | முகாமையாளர், மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | நலன்புரிச் சங்கம் பிரதேச சபை நல்லூர் | 4,230.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 14,850.00 | |
| | | பொருளாளர் ஐக்கிய தேசியக் கட்சி | 1,000.00 | |
| | | இலங்கை தமிழரசுக் கட்சி | 4,000.00 | |
| | | தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2,000.00 | |
| | | ஆணையாளர் நாயகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 9,225.00 | |
| | | | **1,025,700.00** | **375.00** |
| | | | **56,048,792.51** | **3,125.00** |
| | | | **57,074,492.51** | **3,500.00** |

**Cash Book 6954633 - March 2022**

| V.No | Date | Details | | Cash |
|---|---|---|---|---|
| EN/01 | 12 | எஸ் சிவானுஜன் | விடுமுறைநாள் ஜனவரி | 5,776.50 |
| | | | | **5,776.50** |

நிகழ்ச்சி நிரலில் 07வது விடயம் மார்ச் மாத வருமான செலவு அறிக்கையினை அங்கீகாரம் பெறல். குறித்த விடயம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபை அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/18**

மார்ச் மாத வருமான செலவு அறிக்கையினை அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 08 வது விடயமாகிய ஏனையவையில் இடமாற்றத்தில் வருகை தந்த கீழ்வரும் உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்து வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/19**

இடமாற்றத்தில் வருகை தந்த கீழ்வரும் உத்தியோகத்தர்களின் இடர்கடன் சீர்செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திருமதி.U.சுரேகா - 208,000.00 (வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகம்)
- திருமதி.பா.பிறேம கௌரி - 41,500.00 (மாநகரசபை, யாழ்ப்பாணம்)
- திருமதி.S.நிசாந்தினி - 73,600.00 (மாநகரசபை, யாழ்ப்பாணம்)
- திருமதி.V.கஜந்தினி - 103,600.00 (மாநகரசபை, யாழ்ப்பாணம்)

ஏனையவையில் அடுத்து ஏற்கனவே 2022ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் தற்போது கோரப்பட்டுள்ளன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிலும் பார்க்க 10 – 15 வீதமாக விலை அதிகரித்து காணப்படுகின்றது. ஏற்கனவே ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கு அமைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலை காரணாக 3ஆம் கட்ட வேலைகளை சபைக்கு கிடைக்கும் மேலதிக வருமானங்கள் மூலமாகவோ மற்றும் வகை மாற்றங்கள் மூலமாகவோ குறித்த 3ம் கட்ட வேலைகள் செய்து தரப்படும். தற்போதைய விலை மதிப்பீடுகள் விலைமதிப்பீட்டு அதிகாரியால் தீர்மானிக்கப்பட்டு அத்தொகைக்கே கேள்வி கோரல் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே 3ம் கட்ட வேலைகள் சபையின் மேலதிக நிதி மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்பதனை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து சபைக்கு அருகிலுள்ள காணி கொள்வனவு தொடர்பாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணிக்குரிய மதிப்பீடு தொகையாக ரூபா 86 மில்லியன் மதிப்பீடு செய்து அனுப்பியுள்ளனர். ஆனால் காணி உரிமையாளரினால் ரூபா 120 மில்லியனுக்கு விற்பனை செய்வதற்கு உத்தேசித்திருப்பதாகவும் அதிலும் குறைந்த தொகைக்கு விற்பனை செய்வதற்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளதுடன், கடன் சுமை காரணமாகவே அவர் குறித்த காணியினை விற்பதற்கு முன்வந்துள்ளார். குறித்த காணி கொள்வனவு தொடர்பாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுத்தொகையிலும் பார்க்க கூடிய தொகைக்கு எம்மால் கொள்வனவு செய்ய முடியாது. எனவே அதனை கைவிடுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவாகள் மு.ப. 10.10 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் பிரதேசசபை கொள்வனவு செய்யவுள்ளதாக பத்திரிகையில் விளம்பரம் செய்யலாம் எனவும் தாம் ஒரு பிரேரணையாக குறித்த விடயத்தை கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் மீண்டும் ஒரு முயற்சியாக அவர்களுக்கும் நஷ்டம் இல்லாது எமக்கும் பாதிப்பில்லாத வகையில் முயற்சி எடுத்து பார்க்கலாம் எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களினால் இவ் விடயம் தொடர்பாக குறித்த காணி எமக்கு அருகிலுள்ள மிகவும் தேவையான ஒன்று. அதற்கான ஒரு விசேட தீர்மானத்தை எடுத்து அனுமதிக்கு அனுப்பி பார்க்கலாம் எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்களினால் விலைமதிப்பீட்டுத் தொகையிலும் பார்க்க நாம் அதிக விலைக்கு கொள்வனவு செய்யலாமா? எனக் கேட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் விலை மதிப்பீட்டிற்கு மேல் நாம் கொள்வனவு செய்ய முடியாது. மேலதிக நிதியை பொதுமக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளலாம். ஆனால் இக்காணி கொள்வனவு விடயத்தில் மதிப்பீட்டுத்தொகை ரூபா 86 மில்லியன். காணி உரிமையாளர் ஏற்கனவே ரூபா 146 மில்லியன் எனக் குறிப்பிட்டு தற்போது ரூபா 120 மில்லியனுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆகவே இதற்கு கீழ் குறைத்து விற்பனை செய்ய முன்வர மாட்டார்கள். பொது மக்கள் பங்களிப்பு கோரிவதற்கு மிகுதித் தொகை அதிகமாகவுள்ளது. இதில் காணி உரிமையாளரை திணிக்கவும் முடியாது. அவர்கள் வறுமையின் நிமித்தமே விற்பனை செய்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் ஐயா குறிப்பிட்டதை போல பிரேரணையாக கொண்டு வந்து விசேட அனுமதிக்கும் அனுப்புவதுடன் அரசியல் ரீதியாகவும் அணுகிப்பார்க்கலாம். அதன் மூலமாக சபை ஒரு முயற்சியை செய்துள்ளதாக எதிர் காலத்திற்கு காட்டலாம் எனவும் தெரிவித்தார். கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்களினால் தற்போதைய நிலைப்பாட்டினை சுட்டி காட்டி விலைமதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மீள்மதிப்பீட்டிற்கு அனுப்பி அதன் மூலமாக மதிப்பீடு அதிகரித்தால் வேறுவகையிலும் முயன்று கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கலாம் எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் நல்லூர் பிரதேசசபைக்கு காணி கொள்வனவ செய்வது ஆரோக்கியமான விடயம். இது தொடர்பாக கௌரவ ஆளுநர் மற்றும் சம்மந்தப்பட்ட தரப்பினரை அணுகி கொள்வனவு செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இவ்விடத்தை தவறவிட்டால் இனிவரும் காலத்தில் கொள்வனவு செய்ய மடியாதநிலை ஏற்படும் எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களினால் நாம் ஒரு தொகையினை நிர்ணயித்து மீண்டும் காணி உரிமையாளருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடிப் பார்க்கலாம் எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்களினால் இது தொடர்பாக ஒரு சபை அனுமதியை எடுத்து கௌரவ ஆளுநர் அவர்களுக்கு விசேட அனுமதிக்காக அனுப்பி ஒரு முயற்சி எடுக்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் மு.ப. 10.20 மணிக்கு சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

குறித்த விடயம் தொடர்பாக சபையில் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ தவிசாளர் அனுமதியுடன் செயலாளர் கருத்துரைக்கையில் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுமதிக்காக அனுப்பும் போது உரிய திணைக்களங்களுக்கூடாகவே அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்புகின்ற போது காணியின் மதிப்பீடு மற்றும் அரச மதிப்பீடு ஆகியவை இணைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் விலைமதிப்பீட்டிற்கு அனுப்பும் போது காணி உரிமையாளர் கோரும் தொகையினையும் இணைத்தே அனுப்ப வேண்டும். குறித்த காணியின் மதிப்பீட்டிற்கும் அவ்வாறே ஒரு பரப்பிற்கு 11 மில்லியன் எனத் தெரிவித்து அவர்களுடைய கையொப்பத்துடனே அனுப்பப்பட்டது எனத் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/20**
பிரதேசசபைக்கு அருகிலுள்ள காணியின் மதிப்பீடு தொடர்பாக தற்போதைய விலையேற்றங்களை சுட்டிக்காட்டுவதுடன் பிரதேசசபைக்கு அருகில் இவ்வாறான காணி பெற்றுக்கொள்ள இயலாத விடயத்தையும் சுட்டிக்காட்டி காணி உரிமையாளர் கோரும் தொகையினையும் குறிப்பிட்டு மீள் மதிப்பீட்டிற்கு அனுப்புவதெனவும் எதிர்காலத்தில் பிரதேசசபைக்கு கட்டடங்கள் தேவையாகவுள்ளமையால் சபைக்கு அண்மையிலுள்ள காணியை கொள்வனவு செய்வதற்கு மேலதிகமாக 36 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது. நலன்விரும்பிகள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பிரதேசசபைக்கு ஒத்துழைப்பு

வழங்குமாறு மக்கள் பங்களிப்பினை கோருவதெனவும் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து அரியாலை பெரியதோட்டம் 7ஆம் ஒழுங்கை வேலைகளை இரத்துச்செய்து மீள்கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரப்பட்டது. ஏற்கனவே KP இங்சினியரிங் ஒப்பந்தகாரரிடம் குறித்த வேலை வழங்கப்பட்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போது தம்மால் குறித்த வேலைகளை மேற்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டு அவரை இரத்து செய்யப்பட்டுள்ளது. குறித்த வேலைக்கான மீள் கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களினால் குறித்த வேலைக்கான மீள் கேள்வி கோருவதற்கு தாம் முன்மொழிவதாகவும் குறித்த வீதி வேலை ஆரம்பிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் வரும் காலத்தில் குறித்த ஒப்பந்தம் காலாவதியாகும் காலத்தினுள் உரிய வேலை நடைபெறாது விடின் உடனடியாக இரத்துச் செய்து வேலைமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் இனிவரும் காலத்தில் இவ்வாறு நடைபெறாது துரித கதியில் வேலைகள் நடைபெறும் எனத்தெரிவித்து இவ்விடயம் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தலாக வழங்குவோம் எனத்தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/21**

அரியாலை பெரியதோட்டம் 7ஆம் ஒழுங்கை வேலைகளை வழங்கிய ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தினை இரத்துச்செய்து மீள்கேள்வி கோருவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் தமது வட்டாரத்தில் 2021ஆம் ஆண்டின் சேமிப்பு நிதி வேலைகளில் சில வீதிகளுக்கு கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் இதுவரை வேலைகள் நடைபெறவில்லை சபைக்கு தெரியப்படுத்தி அவ்வேலைகள் நடைபெறாததற்குரிய காரணத்தை கோரினார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்களினால் கேள்வி எடுத்தவர்கள் குறித்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போதைய எரிபொருள், சீமெந்து தட்டுப்பாடு காரணமாக கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து விரைவில் குறித்த வேலைகள் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களினால் தமது வட்டாரத்திலுள்ள விவசாய வாய்க்கால் திருத்தம் தொடர்பாக ஏற்கனவே குறிப்பிட்டதை தற்போது ஞாபக மூட்டுவதாகவும் அதற்கான நடவடிக்கை மேற்கொண்டு சீர்ப்படுத்தி வழங்குமாறு தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்களினால் அரசாங்கத்தால் மதிப்பீடு செய்யப்படுவது ஒரு விலையிலும் தற்போதைய விலையேற்றம் அதிகமாகவும் அதிகரித்தும் செல்வதால் பாதீட்டில் ஒதுக்கிய நிதியிலும் பார்க்க வேலைகளுக்கான கேள்வி கோருவது தொடர்பாக பல இடர்பாடுகள் ஏற்படுகின்றது. தங்கள் வாய்கால் பார்வையிடப்பட்ட போது வயல் விதைப்பு நடைபெற்றிருந்தது. அறுவடை நிறைவு பெற்றதும் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. தற்போது ஏற்பட்ட மழை காரணமாக தண்ணீர் தேங்கியுள்ளதால் அடுத்த பருவ மழைக்குள் புனரமைத்து தருவதாக தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் மு.ப 10.30 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ தவிசாளர் ஆகிய தாம் ஏப்ரல் 19 முதல் மே 14ஆம் திகதி வரை வெளிநாடு சென்று வரவுள்ளதால் குறித்த காலப்பகுதிக்கான தமது கடமைப் பொறுப்புக்களை சட்டபூர்வமாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்களிடம் ஒப்படைப்பதற்கு சபையிடம் அனுமதி கோரியதுடன் குறித்த வெளிநாட்டு பயணம் காரணமாக மே மாதத்திற்கான சபைக்கூட்டத்தினை

மே மாதம் 20 திகதி நடாத்துவதற்கும்  சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து சபையால் கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/22**
கௌரவ தவிசாளர் அவர்கள் வெளிநாட்டிற்கு ஏப்ரல் 19 முதல் மே 14ஆம் திகதி வரை சென்று வரவுள்ள காரணத்தால்  குறித்த காலப்பகுதிக்கான  கௌரவ தவிசாளர் அவர்களது  கடமைப் பொறுப்புக்களை சட்டபூர்வமமாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்களிடம் ஒப்படைப்பதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/23**
மே மாத 11ஆம் திகதிய சபைக்கூட்டத்தினை கௌரவ தவிசாளர் அவர்களது வெளிநாட்டிற்கு சென்று வரவுள்ள காரணத்தால் குறித்த மாதம் 20.05.2022ஆம் திகதி மாதாந்தக் கூட்டத்தினை நடாத்துவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களினால் மாற்றுவலுவுடையோர் தொடர்பாக தாம் பிரேரணை சமர்ப்பிப்பதற்கு கால தாமதம் ஏற்பட்ட காரணத்தால் ஏனையவையில் தெரிவிப்பதாக தெரிவித்து  தற்போது மாற்றுவலுவுடையோர் தொடர்பான அரச தனியார் நிறுவனங்களில் கரிசினை  குறைவாக இருப்பதாக அவர்கள் கருதி அதனை ஒரு கோரிக்கையாக தம்மிடம் ஒருவர் முன்வைத்துள்ளதாகவும் தற்போது இது பொதுக்கருத்தாகவும் எழுந்துள்ளது. அவற்றில் அரச மற்றும் தனியார் பொது  அலுவலகங்களில் மாற்றுவலுவுடையோர் தமது சேவைகளை பெற்றுக்கொள்வது இலகுவாக இருக்கின்றதா என ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவற்றில் நேரடியான மாற்றுவலுவுடையோர் கருத்துக்கள் யாதெனில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். எமது தலைமை அலுவலகத்தில் கூட அவர்கள் சக்கர வண்டிகளில்  உள்நுழைந்து சேவை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுவதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இவ்விடயம் தொடர்பாக செயலாளர் அவர்களிடம் இன்றைய தினம் கலந்துரையாடிய போது அவர்களுக்கு சேவை வழங்குவதற்கான பிரத்தியேக இடத்தை ஒதுக்கியிருப்பதாக தெரிவித்திருந்தார். நல்ல விடயம். மாற்றுவலுவுடையோர் அரச தனியார் அலுவலகங்களில் இரு சக்கர தள்ளுவண்டிகளை கொள்வனவு செய்து அவர்களின் தேவைக்காக வைத்திருக்குமாறு இன்னொரு கருத்தை முன்வைத்துள்ளனர் எனத் தெரிவித்து இது மக்கள் நலன் சார்ந்த விடயம். எனவே எமது சபையிலும் குறித்த வண்டிலை கொள்வனவு செய்ய வேண்டும் எனத் தாம் கோரிக்கை முன்வைப்பதாகவும் இவ்வாறான தீர்மானம் வடமாகணத்தில் அவர்களுக்கான கோரிக்கையாகவோ தீர்மானமாகவோ சமர்ப்பிக்கின்ற போது இந்த மாற்றுவலுவுடையோர் தமது சேவைகளை பெற்றுக்கொள்வார் இதனை முன்மாதிரியாக நாம் செயற்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த விடயங்களில் ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டு மாற்றுவலுவுடையோர் உள்நுழைந்து சேவை பெறுவதற்கான பாதைகள் அமைக்கப் பட்டுள்ளது. தற்போது கொக்குவில் நூலகத்தில் மாற்றுவலுவடையோருக்கான மலசலகூடம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாற்று வலுவுடையோர் எமது அலுவலகத்திற்கு வருகை தரும் போது குறித்த விடய உத்தியோகத்தர்களே நேரில் சென்று அவர்களுக்குரிய சேவைகளை வழங்குகின்றனர் எனத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/24**
கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களது கோரிக்கைக்கு அமைவாக நல்லூர் பிரதேசசபையில் இருசக்கர தள்ளுவண்டில் ஒன்றை பிரத்தியேகமாக கொள்வனவு செய்து மாற்றுவலுவுடையோர் சேவை பெற்றுக்கொள்ள அலுவலகத்திற்கு வருகை தரும் போது பயன்படுத்தி சேவை பெறுவதை இலகுபடுத்துவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்களினால் சபையில் கோரியதற்கமைவாக தவிசாளர், செயலாளர் மற்றும் சபை உறுப்பினர் சேர்ந்து அம்பட்ட பால பாதை வளைவு அழகுற அமைக்கப்பட்டமைக்கு மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகள் தெரிவித்ததுடன் கடந்த

முதல் வாரம் J/121 GS பிரிவில் இல் டெங்கு வார களவிஜயத்தின் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திரு.இ.றாஜீம்சன் திரு.இ.கஜீபன் ஆகியோர் எம்முடன் ஆர்வமாகவும் மிகத் திறமையாகச் செயற்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமது தனிப்படவும் மக்கள் சார்பாகவும் நன்றிகள் தெரிவிப்பதாகவும் அத்துடன் அம்பட்ட பாலத்தின் அருகில் 30 வருடங்களுக்கு முன்னிருந்து அம்மன் வீதி என வீதிப்பெயர்ப்பலகை இருந்து வந்தது. காலத்தால் அது அழிவடைந்துள்ளது. தற்போது இராமகிருஸ்னா பாடசாலைக்குரிய பெயர் பலகையே காணப்படுகின்றது. குறித்த வீதியிலிருந்து நந்தாவில் அம்மன் கோயில்வரை அம்மன் வீதி என அனைவரது முகவரியாகவுள்ளதால் எமக்கு குறித்த வீதியின் பெயர் பலகையினை அம்மன் வீதி என பொருத்தி தருமாறு கோரினார்.

அதன்போது கௌரவ தவிசாளர் ஏனையவை விடயத்தில் அவற்றினை தாம் குறிப்பிட இருந்ததாகவும் எமது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நல்ல வேலைத்திட்டம் மேற்கொள்கின்றனர். சென்ற மாதாந்த கூட்டத்தில் அவர்களால் என்ன வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என கோரப்பட்டது. அதற்கமைவாக சென்ற வாரம் முழுவதும் டெங்கு வாரமாக முன்னெடுக்கப்பட்டு அவர்கள் பணிகளை திறம்படச் செய்தார்கள். அவர்களுக்கு சபை சார்பாக நன்றிகளை தெரிவித்து அதற்கு முன்னுதாரணமாக இருந்த செயலாளர் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்து அவரது சிந்தனையிலும் செய்ற்பாட்டிலும் தற்போது வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு Village Page எனும் தலைப்பில் கிராம அமைப்பு, கிராமத்தின் முக்கியமான இடங்கள்,கிராம மொத்த சனத்தொகை என சில தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. வரும் மாதம் குறித்த தரவு அடங்கிய புத்தகம் அனைத்து உறுப்பினர்களுக்கும் தம்மால் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன் ஏற்கனவே சபையின் தீர்மானத்திற்கு அமைவாக பிரதான வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடுவதற்கு கேள்வி கோரப்பட்டு அன்ரா நிறுவனம் அதனை பெற்று நடவடிக்கையில் இருக்கும் போது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போது கோரிய நிதிக்கு நிதி போதாமையால் தம்மால் வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதால் தாம் குறித்த வேலை ஒப்பந்தத்திலிருந்து நீங்குவதாக தெரிவித்துள்ளனர். எனவே குறித்த வேலைக்கான மீள் கேள்வி கோருவதற்கு தீர்மானித்திருப்பதாக தெரிவித்து அதற்கான சபை அனுமதியினைக் கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/25**
சபை எல்லைக்குட்டபட்ட வீதிகளுக்கான பெயர்ப்பலகை பொறித்தல் வேலைத்திட்டத்திலிருந்து அன்ரா நிறுவனம் நீங்கியுள்ளமையால் குறித்த வேலைக்கு மீள்கேள்வி கோருவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து செம்மணி எல்லைப்பகுதி அழகுபடுத்தல் வேலைத்திட்டமானது நீண்ட காலமாக நிதி ஒதுக்கப்பட்டு இன்றுவரை மேற்கொள்ளப்படாது அபிவிருத்தி ஒதுக்கத்தில் உள்ளதாகவும் தற்போது அதனை தொடர்ந்து செய்வதற்கு சபை அனுமதி தேவை என்பதுடன் வலி கிழக்கு தவிசாளர் அவர்கள் தங்கள் பகுதிக்கு அழகுபடுத்தலை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி தருவதாக கூறியிருக்கின்றார். ஏற்கனவே எமக்கு வாய்மொழி மூலமாக கூறி பின்னர் மறுத்துள்ளமையால் நாம் இரு விடயங்களை எடுக்க வேண்டியுள்ளது. ஒன்று அவர்கள் குறித்த பகுதியை வழங்கும் சந்தர்ப்பத்தில் எமது தீர்மானத்திற்கமைவாக அழகுபடுத்தலை மேற்கொள்வதெனவும், தற்போதைய விலையேற்றம் காரணமாக ஒதுக்கிய நிதியில் மேற்கொள்வதில் இடர்பாடுகள் ஏற்படும். அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினார் Parking aria வாக 5 மீற்றர் தூரத்திற்கு அப்பால் மேற்கொள்ள அனுமதிப்பதால் மறுபகுதி அழகுபடுத்த முடியாதுள்ளது. எமது பகுதியில் மரத்துடன் இணைந்த இடத்தில் கல் பதித்து இருக்கைகள் அமைத்துக்கொண்டு ஒதுக்கிய நிதியில் மிகுதியை எமது விளையாட்டு மைதானத்திற்கு ஏற்கனவே நிதி பற்றாக்குறையாக உள்ளதால் மைதானத்திற்கு பயன்படுத்தலாம் எனத்தெரிவித்து சபையின் அபிப்பிராயத்தை கோரினார்.

குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களினால் புதிய தவிசாளர் அவர்கள் பதவிக்கு வந்த ஆரம்ப காலம் முதல் எடுத்த முயற்சி இது எனவும், இதுவரை செயற்படுத்தப்படவில்லை. முன்னைய தவிசாளர் அவர்களாலும் மேற்கொள்ள முடியவில்லை. ஏன் குறித்த வேலைத்திட்டம் கால தாமதம் எனக் கேட்டார்

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த அழகுபடுத்தலுக்குரிய பகுதி வலி கிழக்கு பிரதேசசபைக்குச் சொந்தமானது. அவர்களுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி வாய்மொழி அனுமதி

மூலம் செயற்றிட்டங்கள் தயாரித்து சமர்ப்பிக்கின்ற போது அதற்கான வேலைகளை தாமே மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்திருந்தனர். நல்லூர் பகுதிக்கு மேற்குறிப்பிட்ட மூலை வளைவுப்பகுதி மட்டுமே உள்ளது. எதிர்ப்பக்கம் உள்ள பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையால Parking aria வாக 5 மீற்றர் தூரத்திற்கு அப்பால் அழகுபடுத்தலை மேற்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் செயலாளருடன் தாம் சென்று சந்தித்த போது நல்லூர் பிரதேசசபைக்கு குறித்த பகுதியை ஒப்படைக்க முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார். விரைவில் அதனை பெறும் சந்தர்ப்பத்தில் அப்பகுதியை அழகுபடுத்தலாம். மறு பகுதிக்கு RDA அனுமதி தர மாட்டார்கள். வலி கிழக்கு பகுதி எனக்கு தரும் சந்தர்ப்பத்தில் அதனை அழகுபடுத்துவது இல்லை எனில் குறித்த மூலைப்பகுதிக்கு கல் பதித்து சில இருக்கைகளை அமைத்து மிகுதி நிதியை எமது விளையாட்டு மைதானத்திற்கு பயன்படுத்த சபையின் அனுமதி கோரிய போது கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களினால் ருதற்போது எல்லை நிர்ணயத்தால் எல்லைகள் மாற்றமடைந்துள்ளது. முன்னைய காலத்தில் உப்பளத்திற்கு அருகிலுள்ள கலிங்கல் வரை நல்லூர் பிரதேசசபைக்குரியதாக இருந்ததாக தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/26**

செம்மணி எல்லைப்பகுதி அழகுபடுத்தல் தொடர்பாக எம்மால் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய முதற்கட்டமாக நல்லூர் பிரதேசசபைக்குரிய பகுதியில் மரத்துடன் இணைந்த இடத்தில் கல் பதித்து சில இருக்கைகள் அமைத்து அழகுபடுத்துவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி. செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் LDSP வேலைத்திட்டத்தின் கீழான PT ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளும் வேலைகளுக்கான தொழில்நுட்பக்குழு, பெறுகைக்குழு, ஆகியனவற்றை அமைப்பது தொடர்பாக திட்டப்பொறியியலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொருத்தமான தலைவர் தெரிவு செய்து உறுப்பினர் விபரம் அடுத்த சபைக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்து குறித்த குழு அமைப்பதற்கு சபை அனுமதியினைக் கௌரவ தவிசாளர் அவர்கள் கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 18.04.2022/27**

LDSP வேலைத்திட்டத்தின் கீழான PT ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளும் வேலைகளுக்கான தொழில்நுட்பக்குழு, பெறுகைக்குழு, ஆகியனவற்றை அமைப்பதற்கு பொருத்தமான தலைவர் மற்றும் உறுப்பினர்களை தெரிவு செய்து அடுத்த சபைக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி. செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டு கூட்டமானது மு.ப.10.55 மணியளவில் நிறைவடைந்தது

செயலாளர்.